# நீ கேட்கிற மன்றாட்டு என்ன? .... அது உனக்குக் கொடுக்கப்படும். எஸ்தர் 5 : 3

சகோதரனே, சகோதரியே,

கடந்த எந்த நிமிடமும், இனிமேல் நம்முடைய வாழ்க்கையில் ஒரு நாளும் வராது. ஆனால் தேவனுடைய வசனம் ஒரு நாளும் மாறாது.

**ஆதலால், ஒரு காரியத்தைத் தெரிந்துகொள்;**
**அதை கர்த்தர் உனக்குச் செய்வார்.**

குழம்பிப் போன சகோதரனே, சகோதரியே,

கேட்கவேண்டிய காரியம் அநேகம் உண்டல்லவா ?

**ஆனால், ஒரு காரியத்தை மட்டும் தெரிந்துகொள்.**

**சங், 27 : 4 சொல்கிறது :** கர்த்தரிடத்தில் ஒன்றை நான் கேட்டேன்; அதையே நாடுவேன்; நான் கர்த்தருடைய மகிமையைப் பார்க்கும்படியாகவும், அவருடைய ஆலயத்தில் ஆராய்ச்சி செய்யும்படியாகவும், நான் என் ஜீவனுள்ள நாளெல்லாம், கர்த்தருடைய ஆலயத்தில் தங்கியிருப்பதையே நாடுவேன்.

சகோதரனே, சகோதரியே,

நீ கர்த்தருடைய மகிமையைப் பார்க்க வேண்டும்.

20.10.92 அன்று டி.வி.ஜி.எம். பிரதான ஆலோசகர் கேப்டன். வி. சிகா அவர்களின் துணைவியார் மாலை 3.30 மணிக்கு பெங்களூர் ஆஸ்பத்திரியில் மரித்துவிட்டார்கள்.

இதே மாலையில் 3.30 மணிக்கு பெங்களூரில் உள்ள மிஷனெரி திரு & திருமதி. குரோவ்ஸ் அவர்கள் தன்னுடைய வீட்டில் ஒரு தரிசனம் கண்டார்கள். என்னவெனில்,

திருமதி. பெட்ரிசியா சிகா அவர்கள் பரலோகத்தில் இருப்பதாகவும், மகிமையோடே பிரவேசித்ததாகவும், மகிமையான வரவேற்பு அளிக்கப்பட்டதாகவும், தூதர்கள் பாடி, மகிழ்ந்ததாகவும் இருந்தோம். மறுபடியும் தூங்கினார். 4 மணிக்கு எழும்பினார். இதே தரிசனம் நின்று கொண்டே இருந்ததாம். இந்த செய்தியை கேப்டன். வி. சிகாஅவர்கள் எனக்கு சொன்னபொழுது மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது. மேலும், 1992 அக்டோபர் 25 ஞாயிறு மாலையில் ஒரு ஞாபகார்த்த ஜெபக் கூட்டம் நடைபெற்றது. அங்கு வந்திருப்பவர்களைப் பார்த்து, கேப்டன். வி. சிகா அவர்கள் என்ன சொன்னார்கள் தெரியுமா ?

என்னுடைய மனைவி பரலோகத்தில் பிரவேசித்தமைக்காகவும், மகிமையான வரவேற்பு கொடுக்கப்பட்டமைக்காகவும், என்னை வாழ்த்திவிட்டுச் செல்லுங்கள் – என்பதாக. அல்லேலூயா !

என்னுடைய உள்ளத்தில் யோசித்தேன். ஆண்டவரே, எனக்கும் இப்படிப்பட்ட ஒரு சாட்சியைத் தாரும் – என்பதாக.

கர்த்தருடைய பிள்ளையே,

**எஸ்தர் 5 : 3 சொல்கிறது, :** எஸ்தர் ராஜாத்தியே, உனக்கு என்ன வேண்டும் ? நீ கேட்கிற மன்றாட்டு என்ன ? நீ ராஜ்யத்தில் பாதி மட்டும் கேட்டாலும் அது உனக்குக் கொடுக்கப்படும் – என்பதாக. அவளுடைய வேண்டுகோள் சத்துரு அழிக்கப்படவேண்டும் என்பதாகும். சத்துரு அழிக்கப்பட்டான்.

**1 சாமுவேல் 1 : 17 சொல்கிறது, :** (அன்னாளே,) சமாதானத்துடனே போ. நீ இஸ்ரவேலின் தேவனிடத்தில் கேட்ட, உன் விண்ணபத்தின்படி, அவர் உனக்குக் (குழந்தை) கட்டளையிடுவாராக – என்பதாக.

**1 ராஜா. 3 : 5 சொல்கிறது :** கர்த்தர் சாலமொனுக்கு இராத்திரியில் சொப்பனத்தில் தரிசனமாகி, நீ விரும்புகிறதை என்னிடத்தில் கேள் என்று தேவன் சொன்னார்.

( சாலமொன் கர்த்தரிடம் ) “அடியேனுக்கு ஞானமுள்ள இருதயத்தை தந்தருளும் என்றான்” – என்பதாக.

**சத்துரு அழிக்கப்பட வேண்டுமா ? குழந்தை வேண்டுமா ? ஞானம் வேண்டுமா ? வேதம் சொல்கிறது,**

1. வெள்ளம் போல் சத்துரு வரும்பொழுது, ஆவியானவர் அவனுக்கு விரோதமாக கொடியேற்றுவார்.
2. ஞானமும் உணர்வுமுள்ள இருதயத்தை உனக்குத் தந்தேன். நீ கேளாத ஐசுவரியத்தையும் மகிமையையும் உனக்குத் தந்தேன். – என்பதாக.

என் அன்பு சகோதரனே சகோதரியே,

**ஒரு காரியத்தை தெரிந்துகொள் அதை நான் உனக்குச் செய்வேன். –** ஆமென்.

இந்த மாதத்தில் கீழ்க்கண்ட பாடலைப் பாடுங்கள்.

**ஒன்றை நான் கேட்டேன், அதையே நாடுவேன் என்றும் தம் மகிமையைக் காண,**
**ஜீவனுள்ள நாளெல்லாம் தம் ஆலயத்தில் தங்குவதை வாஞ்சித்து நாடிடுவேன். அல்லேலூயா !**